இந்து தமிழ் திசை



### பட்டம் பெற்று பணிக்கு செல்வதுடன் கடமை முடிவதில்லை

# நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்கள் பாடுபட வேண்டும்

## ஐஐஎம் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை




● திருச்சி ஐஐஎம்-மில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்கிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி. உடன் ஐஐஎம் இயக்குநர் பவன்குமார் சிங், ஐஐஎம் ஆளுநர்கள் குழுத் தலைவர் ஜலஜ் தானி.

படம்: ர.செல்வமுத்துகுமார்

**திருச்சி**

பட்டம் பெற்று பணிக்கு செல்வதுடன் இளைஞர்களின் கடமை முடிவதில்லை; நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என திருச்சி ஐஐஎம் பட்டமளிப்பு விழாவில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை வழங்கினார்.

திருச்சியில் புதுக்கோட்டை சாலையில் இயங்கி வரும் இந்திய மேலாண்மை நிறுவனத்தின்(ஐஐஎம்) 13-வது பட்டமளிப்பு விழா ஐஐஎம் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. திருச்சி ஐஐஎம் ஆளுநர்கள் குழுத் தலைவர் ஜலஜ் தானி தலைமை வகித்தார். திருச்சி ஐஐஎம் இயக்குநர் பவன் குமார் சிங் ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் தலைமை விருந்தினராக கலந்துகொண்ட தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, 457 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். தொடர்ந்து, 'இனிய வணக்கம்' என தமிழில் தொடங்கி ஆளுநர் பேசியது:

10 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாடு வளர்ந்த நாடுகளால் திரும்பிப் பார்க்கப்படவில்லை. தற்போது உலக நாடுகள் எந்தவொரு முக்கியமான முடிவையும் இந்தியாவின் ஆலோசனை இல்லாமல் எடுப்பதில்லை. பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடாக இந்தியா உள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்பு 500 ஆக இருந்த 'ஸ்டார்ட் அப்' நிறுவனங்கள் தற்போது 1,600-க்கும் மேல் உள்ளன. 25 கோடி இந்திய மக்கள் ஏழ்மையிலிருந்து மீண்டுள்ளனர். தமிழகத்தில் 1.5 கோடி பெண்கள் முத்ரா கடன் மூலம் பயனடைந்துள்ளனர். செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக், விண்வெளி, நானோ தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்தியா அசாத்தியமான வளர்ச்சியடைந்து வருகிறது.

பட்டம் பெற்று பணிக்கு செல்வதுடன் இளைஞர்களின் கடமை முடிந்துவிடுவதில்லை. நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும். 2047-ம் ஆண்டு 100-வது சுதந்திர ஆண்டில் முழுமையாக வளர்ச்சி அடைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற உழைக்க வேண்டும்.

உடல்நலம், தொழில்நுட்பம், ஆன்மிகம், யோகா ஆகியவற்றில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். தற்போது விவாகரத்துகள் அதிகரித்து வரும் நிலையில், எதிர்கால வாழ்க்கைத் துணையை அமைத்துக்கொள்ளும்போது இளைஞர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும்.

இந்திய நாட்டின் நாகரிகம், 7,000 ஆண்டுகளுக்கு முன்பானது. இந்தியாவை எந்த மன்னர்களும் சொந்தம் கொண்டாடவில்லை. இந்தியா மக்களுக்கான நாடு. ஸ்ரீரங்கம், ராமேசுவரம், பத்ரிநாத், கேதாரநாத், காசி போன்ற ஆன்மிக தலங்கள் எந்த மன்னர்களாலும் சொந்தம் கொண்டாடப்படவில்லை. வள்ளலார், விவேகானந்தர் போன்ற பெருந்துறவிகளின் வழிகாட்டுதல்படி இளைஞர்கள் நடக்க வேண்டும். இன்று பட்டம் பெற்றவர்களில் அதிகளவில் பெண்கள் உள்ளனர். பெண் சக்தி அபரிமிதமானது. எதிர்கால இந்தியா பெண்களின் கரங்களில் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், மேலாண்மையில் முனைவர் பட்டப்படிப்பு(DPM) முடித்த 3 பேர், முதுநிலை பட்டப்படிப்பு(PGPM) முடித்த 355 பேர், முதுநிலை பட்டப்படிப்பு- மனித வளங்கள்(PGPM-HR) முடித்த 53 பேர், வணிக மேலாண்மையில் முதுநிலை பட்டம்(PGPBM) முடித்த 46 பேர் என 457 பேர் பட்டம் பெற்றனர். இவர்களில், 10 பேர் தங்கப் பதக்கம் பெற்றனர்.

INDIAN INSTITUTE OF MANAGEMENT
30 MAR 2025
TIRUCHIRAPPALLI - 24

Source : The Hindu Tamil
Date : 30/03/2025
pageno : 05